JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **18/2020** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 1** | Prosecution /Defence / Court | |
| Name | சங்கீதா | Village | சுள்ளிபாளையம்,<br>துடுப்பதி,<br>பெருந்துறை |
| Father's Name | காளிமுத்து | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 04.02.2026.**

**<u>முதல் விசாரணை</u>**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு விஜயமங்கலம் டோல்கேட்டில் பணம் வசூல் செய்யும் வேலை செய்து வருகிறேன். 19.12.2019 ம் தேதி காலை 5.30 மணியளவில் வழக்கம் போல் நான் விஜயமங்கலம் டோல்கேட்டிற்கு பணிக்கு செல்வதற்காக உழவன் தோட்டம் ரோட்டில் புளியமரம் அருகில் TVS Excel TN 56 D 4537 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் வேலைக்குச் சென்றேன். ஆஜரில் உள்ள எதிரி லோகநாதன் இடது புறம் புளிய மரத்திற்கு கீழ் மறைந்திருந்தவர், என்னை வழி மறித்து என்னுடைய முகத்தில் மிளகாய்ப் பொடியை தூவி விட்டு நான் கழுத்தில் அணிந்திருந்த 3 பவுன் தங்க செயினின் அப்போதைய மதிப்பு ரூ. 60,000 ஆகும். எதிரி பறித்துக் கொண்டு ஓடி விட்டார்.

2. நான் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தை அந்த இடத்திலேயே போட்டு விட்டு எங்கள் ஊரில் உள்ள மதுர வீரன் கோவிலுக்குச் சென்று கோவில் பூசாரி பரமசிவம் என்பவரிடம் நடந்த சம்பவத்தைப் பற்றி கூறினேன். அக்கம் பக்கம்

இருந்தவர்களுடன் சேர்ந்து ஆஜர் எதிரி லோகநாதனை தேடினோம். ஆனால் ஆஜர் எதிரி லோகநாதன் கிடைக்கவில்லை. என்னுடைய முகத்தை கழுவிக் கொண்டு செயினை பறித்த இடத்தை அங்கிருந்த நபர்களான எங்கள் ஊர்க்காரர்களிடம் காண்பித்தேன். பின்னர் என்னுடைய இருசக்கர வாகனத்தை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்து விட்டேன். என்னுடைய அண்ணன் ஜீவரத்தினம் வெளியூருக்கு வேலைக்குச் சென்றிருந்தவர் அன்றைய தினம் மாலை வீட்டிற்கு வந்தவுடன் பெருந்துறை காவல் நிலையம் வந்து எழுத்து மூலமான புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் ஆகும். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் புகாரை வழக்காக பதிவு செய்ததும், சம்பவ இடத்தை நான் அடையாளம் காட்டினேன். என்னை விசாரிக்க நடந்த விவரங்களை கூறினேன்.

3. 20.12.2019 ம் தேதி என்னுடைய நகையை மீட்டிருப்பதாக பெருந்துறை காவல் நிலையத்திலிருந்து தகவல் பெற்று நான் பெருந்துறை காவல் நிலையம் வந்து என்னுடைய 3 பவுன் தங்க செயினை அடையாளம் காட்டினேன். என்னுடைய செயின் அறுந்த நிலையில் இருந்தது. என்னை மறுபடியும் பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் விசாரித்து என்னுடைய மறுவாக்குமூலத்தை 20.12.2019 ம் தேதி பதிவு செய்தார். நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து நீதிமன்றத்திலிருந்து அறுந்த நிலையில் இருந்த 3 பவுன் தங்க செயினை பெற்றுச் சென்றேன். இன்று நான் நீதிமன்றத்தில் வழக்கிற்காக இந்த செயினை ஆஜர் படுத்துகிறேன். நான் செயினை அணிவதற்காக அறுந்த நிலையில்இருந்த செயினை ஒட்ட வைத்து தினமும் அணிந்து சென்று கொண்டிருக்கிறேன். **3 பவுன் எடையுள்ள தங்க செயின் அ.சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அ.சா.பொ. 1 யை மனு தாக்கல் செய்து இடைக்கால பொறுப்பில் ஏற்கனவே பெற்றுச் சென்றுள்ளார் 3 பவுன் எடையுள்ள தங்க செயின் அ.சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்பட்ட பின் மீண்டும் அ.சா.1 வசம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது )**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் B.A HIstory. எதிரி லோகநாதன் என்னுடைய அண்ணன் முறை என்றால் சரிதான். என்னுடைய தாத்தா வகையில் பங்காளி முறை ஆவார். எதிரி என் வீட்டிற்கு பக்கத்தில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் டோல்கேட்டில் ஒன்றாக தான் வேலை செய்து வருகிறோம் என்றால் சரிதான். என்னுடைய பணி நேரம் காலை 6 மணி முதல் 2.00 மணி வரை ஆகும். எதிரியின் பணி நேரம் 2 – 10 மணி மற்றும் இரவு 10 to காலை 6 மணி ஆகும். 19.12.2019 ம் தேதி அன்று எதிரி பணிக்குச் சென்ற விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் அன்றையதினம் அவர் பணிக்குச் செல்லவில்லை என்பதை தெரிந்து கொண்டேன். போலீசார் விசாரணையில் எதிரியும் நானும் ஒன்றாக வேலை செய்கிறோம் என்ற விவரத்தையும், எதிரி அண்ணன் என்ற உறவுமுறையும் சொன்னேன் என்றால் சரிதான்.

2. போலீசாரிடம் சொல்லும் போது எதிரியும் உடன் இருந்தார். போலீசார் நான் சொன்ன விவரத்தையும், எதிரி சொன்ன விவரத்தையும் வாக்குமூலமாக பதிவு செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். போலீசார் என்னை எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் சம்பவ இடத்தில் வைத்து மாலை 6 மணியிலிருந்து விசாரித்தார்கள். விசாரிக்கும் போது என்னுடன் யார் யார் இருந்தார்கள் என்றால் ஜீவரத்தினம்,பரமசிவம் மற்றும் எதிரி இருந்தார்கள். அ.சா.ஆ. 1 புகார் கலந்து ஆலோசனை செய்து எழுதப்பட்டதா என்றால் இல்லை. குற்ற சம்பவம் நடந்தால் உடனடியாக புகார் கொடுக்க வேண்டும் என்று எனக்கு தெரியும். காலையில் சம்பவம் நடந்ததற்கு மாலையில் புகார் கொடுத்தற்கான சிறப்பு காரணம எதுவும் உள்ளதா என்றால் என் முகத்தில் மிளகாய்ப் பொடி தூவி இருந்ததாலும் என் அண்ணன் இல்லாததாலும் என் அண்ணன் வந்த பிறகு சென்று புகார் கொடுத்தேன்.

3. மிளகாய்ப் பொடி தூவியதற்கு மருத்துவம் பார்த்தேனா என்றால் இல்லை. வைத்தியம் பார்க்கும் அளவுக்கு தொந்தரவு இல்லை என்றால் கண்ணில் எரிச்சல் இருந்தது. மற்றபடி எந்த பாதிப்பும் இல்லை நல்ல நிலையில் இருந்தேன் என்றால் சரிதான். அன்றையதினமே பறித்த செயினை போலீசார் காட்டினார்களா என்றால் இல்லை 20.12.2019 ம் தேதி தான் காட்டினார்கள். செயினின் அங்க அடையாளமோ

செயினின் மாடல் வகையையோ எந்த கடையில் வாங்கினேன் என்பதையோ போலீசார் விசாரணையிலும், புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதை வாக்குமூலமாக பதிவு செய்து கொண்டார்கள் என்றால் சரிதான் அதில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

4. என் குடும்பத்திற்கும், எதிரி குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்து வந்தது என்றால் சரியல்ல. என் அப்பா இறந்து விட்டார் என்றால் சரிதான். எதிரி குடும்பத்திற்கும் என் குடும்பத்திற்கும் என் அப்பா இறப்பதற்கு முன்பிருந்தே முன்விரோதம் இருந்து வந்தது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து எப்போது செயினை திரும்ப பெற்றேன் என்றால் ஒரு வாரம் கழித்து பெற்றுக் கொண்டேன். எங்கிருந்து பெற்றுக் கொண்டேன் என்றால் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக் கொண்டேன். நான் தான் மனு தாக்கல் செய்து செயினை பெற்றுக் கொண்டேன். செயினை பெற்றுக்கொள்ளும் போது நீதிமன்றத்தில் உத்தரவு ஏதாவது பிறப்பித்து இருந்தார்களா அந்த உத்தரவு பற்றி நான் தெரிந்து கொண்டேன் என்றால் இல்லை.

5. செயினை நான் வாங்கும் போது அறுந்த நிலையில் இருந்தது அதை பற்ற வைத்து ஒட்டி போட்டு உள்ளேன். நீதிமன்ற உத்தரவில் செயினை மாறுதல் செய்யக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அந்த உத்தரவை தெரிந்து கொண்டேன் என்று கையெழுத்து செய்து தான் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அதற்குப் பின்னிட்டு மாறுதல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சாட்சிகள் அனைவரும் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்றால் சரிதான். மூன்றாம் தரப்பினர்கள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் வேலை செய்யும்போது காஞ்சிக்கோவிலை சேர்ந்த சக்திவேல் என்பவரும் எங்களுடன் பணி புரிந்தார் என்றால் சரிதான். சக்திவேலுக்கு, எனக்கும் பழக்கம் இருந்ததாக எதிரி சொன்னார் என்றால் சரியல்ல. ஏதோ ஒரு காரணத்தினால் எனக்கும், எதிரிக்கும் முன் விரோதம் இருந்தது என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் எனக்கும், எதிரிக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்ததை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் எதிரியை பற்றி சொன்னதும் எதிரி என்னைப் பற்றி சொன்னது இருவருக்கும் மன கசப்பு இருந்து வந்தது என்றால் சரிதான்.

6. போலீசார் விசாரணையின் போது மிளகாய் பொடி பட்ட துணியை

ஒப்படைத்தேன் என்றால் சரிதான். அந்த துணியை போலீசார் வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரிதான். எங்கு வைத்து துணியை வாங்கினார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து வாங்கினார்கள் என்று சாட்சி சொல்லிவிட்டு தற்போது மேற்படி துணியுடன் தான் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்ததாக சாட்சியம் அளிக்கிறார். துணியை போலீசார் கேட்டு பெற்றுக் கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரி மீது இருந்த முன்விரோதம் காரணமாக சக்திவேலுடன் இணைத்து பேசிய காரணத்துக்காக எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சக்திவேல் எனக்கு தம்பி போன்று தான் பேசி வந்தார்.

7. எதிரி தான் மற்றொரு பெண்ணுடன் தவறான உறவு வைத்திருந்தார் அதுதான் அங்கு வேலை செய்த அனைவருக்கும் தெரியும். நானாக சென்னை அறுத்து காவல் நிலையத்தில் கொடுத்து ஜோடிக்கப்பட்ட புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் உண்மையில் நடைபெற்று இருந்தால் உடனடியாக புகார் கொடுத்து இருப்பேன் என்றால் சரியல்ல. என்னுடைய உடல் நிலையை பார்த்து விட்டு தான் புகார் கொடுத்தேன். எதிரிக்கும் இந்த வழக்குக்கும் சம்பந்தமில்லை என்றால் சரி இல்லை. பொய் புகார் அளித்துபொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் பெற்றுக் கொண்ட நிலையில் அ.சா.பொ.1 யை ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை